விச்வாவஸு ௵ ஆனி மீ
ஜுன் - ஜுலை 2025

மலர்: 8
இதழ்: 3

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

# தேஸிக ஸந்தேஸம்






**MONTHLY NEWSLETTER FROM:**

**SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM**

MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799, 044 - 43863747

Email: svdd.mylai@gmail.com Web: www.svdd.com



ஸ்ரீ:

ஸ்ரீஅலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீவிஜயவல்லீ ஸமேத ஸ்ரீஹேதிராஜ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

ப்ரதிபடஶ்ரேணீபீஷண வரகுணஸ்தோம பூஷண
ஜநிபயஸ்தாந தாரண ஜகதவஸ்தான காரண ।
நிகில துஷ்கர்மகர்ஶந நிகமஸத்தர்மதர்ஶந
ஜய ஜய ஸ்ரீஸுதர்ஶந ஜய ஜய ஸ்ரீஸுதர்ஶந॥ – ஸ்ரீஸுதர்ஶநாஷ்டகம்

# ஸ்ரீ ஸுதர்ஸன மஹாயஜ்ஞ பத்திரிகை 2025

ஶ்ரிய: பதியான ஸ்ரீமந் நாராயணனே ‘‘அஹமேவ–வேத்ய:’’ என்கிறபடி மாடமாமயிலை ஸ்ரீவேதாந்த தேஶிகன் ஸந்நிதியில் எழுந்தருளி பக்த ஸம்ரக்ஷணம் செய்து வருகிறார். பரமகாருணிகரான ஸ்ரீ ஸர்வேஸ்வரனுக்கு ஸர்வசக்திகளில் இச்சாசக்தி, க்ரியாசக்தி என்கிற இரு விசேஷமான சக்திகள் உண்டு. இச்சாசக்தி ஸ்ரீமஹாலக்ஷ்மியும், க்ரியாசக்தி ஸ்ரீ சக்ரரூபமான ஸ்ரீ ஸுதர்ஸந ஆழ்வானும் ஆவார்கள். பகவான், ஸ்ரீஸுதர்ஸநனைக்கொண்டு ஸகல பாபங்களையும், எல்லாவிதமான தோஷங்களையும், கஷ்டங்களையும் விலக்கி அடியார்களுக்கு ஸகலவிதமான க்ஷேமங்களையும் அளிக்கிறான். மேற்படி நம் தேவஸ்தானத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ ஸுதர்ஸநாழ்வார்க்கு நாளது விஶ்வாவஸு ஷூ ஆனி மீ 28ம் தேதி (12.07.2025) சனிக்கிழமை பிரபல ஆகம விற்பன்னர்களால் ஸ்ரீமஹா ஸுதர்ஸந ஹோமம் நடத்திக் கொள்வதாக திருவுள்ளம் பற்றியிருக்கிறான். இவ்வைபவத்தில் ஆஸ்திகோத்தமர்கள் ஸகல விதத்திலும் கலந்து கொண்டு ஸ்ரீஸுதர்ஸந ஆழ்வார் க்ருபாகடாக்ஷத்திற்கு பாத்திரர்களாகும்படி ப்ரார்த்திக்கிறோம்.

*<u>தர்மகர்த்தாக்கள்</u>*

R. அனந்த பத்மநாபன்    R. முகுந்தன்    L.N. ஸ்ரீனிவாசன்

## உற்சவ விவரம் / நிகழ்ச்சி நிரல்

*12.07.2025 – சனிக்கிழமை*

| | |
|---|---|
| காலை 8.00 முதல் | – ஸ்ரீஸுதர்ஸந ஹோமத்திற்காக அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம், சதுஸ்தானார்ச்சனை (கும்பம், மண்டலம் ஆராதனம்), ஸங்கல்பம் |
| காலை 10:00 மணி | – ஹோமம் ஆரம்பம் |
| மதியம் 12:00 மணி | – பூர்ணாஹுதி |
| மதியம் 12:30 மணி | – ப்ரஸாத விநியோகம் |

**ஸங்கல்ப நன்கொடை ரூ. 1000/-**

ஸேவார்த்திகள் ஹோமத்திற்குண்டான பசுநெய், தேன், பழங்கள், புஷ்பங்கள் போன்ற திரவியங்கள் மற்றும் நன்கொடைகளை தேவஸ்தான அலுவலகத்தில் நேரில் செலுத்தலாம்

விச்வாவஸு ௵ ஆனி மீ
ஜுன் - ஜுலை 2025

மலர்: 8
இதழ்: 3

ஶ்ரீ:

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்

## திருக்கோவில் பூஜா காலங்கள் *

**காலை**

| ஞாயிறு முதல் புதன் வரை | | | வியாழன் முதல் சனி வரை | | |
|---|---|---|---|---|---|
| 6.30 | - | விச்வரூபம் | 6.00 | - | விச்வரூபம் |
| 8.30 | - | திருவாராதனம் | 7.30 | - | பொது தரிசனம் |
| 9.45 | - | சாற்றுமுறை | | | |

12.00 - உச்சிகாலம்

**மாலை**

4.00 - ஸந்நிதி திறப்பு, 7.30 - திருவாராதனம், 9.00 - சயனம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

**தர்மகர்த்தாக்கள்:**
ஸ்ரீ R. அனந்தபத்மநாபன் | ஸ்ரீ R. முகுந்தன் | ஸ்ரீ L.N. ஸ்ரீநிவாஸன்

**Editorial Board :**
ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

**Photo Courtesy:** M.K.S. Mohan Babu, P.S. Anand & Thillai Ranganathan
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai - 87, Cell : 95000 45604
Designed by: ye**SK**ay designs



**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்**
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 044 - 24953799, 43863747
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com



ஸ்ரீ:

# ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்$^{3}$ரி ஸமம் ஸ்தா$^{2}$நம் ப்$^{3}$ரஹ்மாண்டே$^{3}$ நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே$^{3}$வோ ந பூ$^{4}$தோ ந ப$^{4}$விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்!

ஆனி மாஸத்திற்கான அதிஷ்டான தேவதையாக திகழ்கிறான் த்ரிவிக்ரமன் என்னும் எம்பெருமான். த்ரிவிக்ரம மூர்த்தியானவர், சிவப்பு நிறமுடையவராவார்: சங்கம், சக்ரம், கதை பத்மங்களை தரித்து, கிரீடம். ஹாரம், கேயூரம், குண்டலங்களையணிந்து பிரகாசிப்பவராவார் என்கிறது ஆகமம்.

ஸ்வாமி தேசிகனும் தாமருளிய பன்னிருநாமத்தில் ஸ்ரீஹஸ்திகிரியின் மீது எழுந்தருளி, வேண்டிய வரத்தைக் கொடுத்தருள்கின்ற, சக்ரவர்த்தியாகிய பேரருளாளன், திரிவிக்ரமனாக இருந்து, ஜ்வலிக்கின்ற அக்நிபோன்ற நிறமுடையனாய், திருக்கைகளில், ப்ரகாசம் பொருந்திய, வாள் நான்கையும், உருவித் தாங்கி, கழுத்தின் வலப்புறத்திலும், போரில் வலிமையைக் காட்டுகின்ற ராக்ஷஸர்களுடைய திசையாகிய தென்மேற்கிலும், சிறந்து நின்று ரக்ஷிப்பான் என்று புகழ்பாடுகிறார்.

'குட்டத்துக் கோள்முதலை துஞ்ச' எம்பெருமானால் குறித்தெறியப்பட்டவரும், பாரதப்போரில் கண்ணனால் இரவியை மறைப்பதற்குக் காரணமாக இருந்தவரும், வைஷ்ணவத்வம் ஸித்திப்பதற்கு ஒவ்வொரு ஸ்ரீவைஷ்ணவரின் தோள்களிலேயும் ஒற்றுண்டு நின்றவருமான ஸ்ரீ சக்கரத்தாழ்வான் அவதரித்த தினம் ஆனி சித்திரை.

பாண்டிய குலத்தின் ஓர் அரசன் பரதத்வநிர்ணயம் செய்து உய்ய வழி தேட ஆசைப்பட்டு, விசேஷமாகத் தனத்தையெடுத்து கிழியாகக் கட்டி, வித்வான்களை வரவழைத்து ஒரு பெரும் ஸபை சேர்த்த போது பல மதங்களை நிரஸித்து 'ஸ்ரீமந்நாராயணனே மேம்பட்டவன்' என்பதை பரக்க நிரூபித்து, அக்கிழியையறுத்து, தனத்தை அச்யுதனின் ப்ரீதியாக எடுத்துக் கொண்டு ஆண்டாளை வளர்த்து அழகிய மணவாளனோடு விவாஹம் செய்துவைத்து அவருக்கு மாமனார் என்று பெருமை பெற்று 'கல்பஸூத்ர வ்யாக்யாதா' என்று ஸ்வாமியால் வணங்கப்பட்ட பெரியாழ்வார் ஸ்வாதியில் அவதரித்தது இந்த மாதத்தின் சிறப்பு.

இன்னது என்று நினைக்கமுடியாததும், ஆச்சர்யமானதும், பகாவானுடைய அருளாலே எளிதாகக் கிடைத்ததுமான ஜ்ஞான, வைராக்யத்தின் குவியல் போன்றவராகவும், பகவானை மனனம் செய்பவராகவும், ஆழ்ந்த பகவத்பக்திக்குக் கடலாகவுமிருக்கிற, மகிழ்மாறனுக்குப்பின் நம் ஆசார்ய பரம்பரையில் ப்ரதானமானவருமான ஸ்ரீமந்நாதமுனிகள் இந்த மாதம் அனுஷ நக்ஷத்ரத்தில் அவதரித்தது மேலும் சிறப்பு.

இந்த ஆனி இதழ் எம்பெருமானின் ப்ரஹ்மோத்ஸவ காட்சிகளுடன் ஸ்வாமி தேசிகன் விஷயமான காப்பகக் கட்டுரை, சிறப்பு வ்யாஸங்கள் இவற்றுடன் எப்பொழுதும் வெளியாகும் ஆங்கில தொடர்களையும் தாங்கி வருகிறது.

# Aani Anugraham

## FROM THE DESK OF TRUSTEES

With the divine grace of our Acharyan, Sri Vedanta Desikan, and the boundless blessings of Sri Srinivasa Perumal and Sri Alarmelmangai Thayar, we are pleased to share the highlights of the sacred events that took place at our temple during the auspicious month of Vaikasi, as well as the upcoming festivals in the spiritually significant month of Aani.

**Vaikasi highlights**

The Annual Brahmotsavam, a cornerstone of our temple's spiritual calendar, holds profound significance. Instituted by Lord Brahma himself to invoke the divine presence of the Lord on earth and to uphold dharma, this Utsavam sanctifies the surroundings, showers blessings upon devotees, and reaffirms the agamic and traditional grandeur of our temple rituals. It remains a spiritual beacon, uniting the community in collective devotion and service.

This year, as in years past, the 10-day Brahmotsavam of Sri Srinivasa Perumal was celebrated with grandeur, adherence to tradition. Each day witnessed meticulously performed rituals, magnificent alankarams, and uplifting pathi ulathal and processions, enriching the spiritual atmosphere. The Garuda Sevai, Nachiyar Thirukkolam, Yanai Vahanam, and Rathotsavam (Ther) were among the most notable, drawing an enthusiastic response from devotees. We extend our heartfelt gratitude to all devotees, kainkaryaparas, and volunteers whose dedicated efforts made the celebrations memorable and spiritually fulfilling.

In addition, the Thotta Utsavam and Nammazhwar Satrumurai were conducted with full Vedic and Divya Prabandha honours, bringing alive the spirit of Azhwar's bhakti and Acharya kainkaryam.

**Aani – A month of divine grace**

The Tamil month of Aani occupies a unique place in our religious calendar, marked by sacred observances that underscore themes of purification, divine order, and spiritual renewal. Prayers and homams performed during this month are believed to bestow health, peace, and prosperity. Aani is also particularly sacred for the worship of Lord Sudarsana, the divine embodiment of protection and energy.

**Upcoming celebrations**

As we step into Aani, we look forward to celebrating the Kodai Utsavam, offering fragrant, cooling rituals to our Perumal and Thayar in the spirit of loving service (seva). We are also looking forward to Sudarsana Jayanthi — the sacred appearance day of Sri Sudarsana Azhwar. A special Sudarsana Homam will be performed on 12th July 2025, with full Vedic sanctity, invoking divine blessings for the well-being of all devotees and the welfare of our state and nation. All are warmly invited to participate and receive the grace of Chakratthazhwar.

**Welcoming the New Electoral Board**

We extend our sincere congratulations to the newly elected 11 members of the Electoral Board, who will serve a 7-year term. We thank all the voters and participants for ensuring a smooth election process, reflecting the unity and devotion of our temple community.

**A note of gratitude**

Our heartfelt thanks go to all devotees, patrons, volunteers, and well-wishers for your unwavering support and reverent participation in every religious and cultural event of our Devasthanam. Your involvement sustains and strengthens the living tradition of our sampradaya. May we continue to walk together on the path of dharma and kainkaryam, under the ever-watchful grace of our Acharyan and the Divya Dampathis.

# விச்வாவஸு வருட ஆனி மாத பஞ்சாங்கம்

| ஆங்கில தேதி | தமிழ் தேதி | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்ஸவம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| ஜூன்/ ஜூலை | ஆனி | | | | | |
| 15.06.2025 | 1 | சதுர்த்தி | ஞாயிறு | ச்ரவணம் | மாதப்பிறப்பு. காலை பெருமாள், தேசிகன் திருமஞ்ஜனம். மாலை வீதிபுறப்பாடு. ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | மாதப்பிறப்பு: ஸ்ரீ M.V. ஸ்ரீநிவாஸன் குடும் பத்தினர். ச்ரவணம்: கொடநகர் Dr. S. துரைஸ்வாமி ஐயங்கார் பண்ட் |
| 16.06.2025 | 2 | பஞ்சமி | திங்கள் | அவிட்டம் | பூதத்தாழ்வார் | |
| 17.06.2025 | 3 | ஷஷ்டி | செவ்வாய் | சதயம் | காலை பேயாழ்வார், திருமஞ் ஜனம். மாலை வீதிப்புறப்பாடு, ஆஸ்தானம் | ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அஸோஸியேஷன் |
| 18.06.2025 | 4 | ஸப்தமி | புதன் | பூரட்டாதி | திருமால்வடை | |
| 19.06.2025 | 5 | அஷ்டமி | வியாழன் | உத்திரட்டாதி | திருமால்வடை | |
| 20.06.2025 | 6 | நவமி/ தசமி | வெள்ளி | ரேவதி | காலை பெருமாள், தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை தாயார் உள்புறப்பாடு | ஸ்ரீ அத்திகிரி அருளாளன் |
| 21.06.2025 | 7 | ஏகாதசி | சனி | அச்வினி | காலை பெருமாள் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை பெருமாள் வீதிபுறப்பாடு | ஸ்ரீ V. ராஜகோபால் குடும்பத்தினர் |
| 22.06.2025 | 8 | த்வாதசி | ஞாயிறு | பரணி | திருமால்வடை | |
| 23.06.2025 | 9 | த்ரயோதசி | திங்கள் | க்ருத்திகை | திருமங்கையாழ்வார் | |
| 24.06.2025 | 10 | சதுர்தசி | செவ்வாய் | ரோஹிணி | ஸ்ரீ கண்ணன் ஆஸ்தானம் | |
| 25.06.2025 | 11 | அமாவாசை | புதன் | ம்ருகசீர்ஷம் | காலை பெருமாள் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை பெருமாள் வீதிபுறப்பாடு | ஸ்ரீ M.A. பார்த்தஸாரதி குடும்பத்தினர் |
| 26.06.2025 | 12 | ப்ரதமை | வியாழன் | திருவாதிரை | ஸ்ரீ ராமானுஜர் | |
| 27.06.2025 | 13 | த்விதீயை | வெள்ளி | பூனர்வஸு / புஷ்யம் | கோடை உத்ஸவம் 1-ம் நாள். காலை பெருமாள், தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை வீதிபுறப் பாடு | ஸ்ரீ K.S. ஸந்தானம் & ஸ்ரீ K. வரதராஜன் |
| 28.06.2025 | 14 | த்ருதீயை | சனி | புஷ்யம் / ஆயில்யம் | கோடை உத்ஸவம் 2-ம் நாள். காலை பெருமாள், தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை வீதிபுறப்பாடு | ஸ்ரீ Dr. C.V. கோபால் & ஸ்ரீ V.P. ப்ரேம்குமார் |
| 29.06.2025 | 15 | சதுர்த்தி | ஞாயிறு | ஆயில்யம் / மகம் | கோடை உத்ஸவம் 3-ம் நாள். காலை பெருமாள், தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை வீதிபுறப்பாடு | ஸ்ரீ L.N. ஸ்ரீநிவாஸன் & ஸ்ரீ K. ரங்கராஜன் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 30.06.2025 | 16 | பஞ்சமி | திங்கள் | மகம் | கோடை உத்ஸவம் 4-ம் நாள். காலை பெருமாள், தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை வீதிபுறப்பாடு | ஸ்ரீ T.P. ரங்கராஜன் & ஸ்ரீ G. பத்ரி நாராயணன் |
| 01.07.2025 | 17 | ஷஷ்டி | செவ்வாய் | பூரம் | கோடை உத்ஸவம் 5-ம் நாள். காலை பெருமாள், தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை வீதிபுறப்பாடு | ஸ்ரீ N. கஸ்தூரி ரங்கன் & ஸ்ரீமதி ஸ்ரீநிதி மோஹன் |
| 02.07.2025 | 18 | ஸப்தமி | புதன் | உத்திரம் | கோடை உத்ஸவம் 6-ம் நாள். காலை பெருமாள், தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை வீதிபுறப்பாடு | ஸ்ரீ Dr. P. க்ருஷ்ணமூர்த்தி & ஸ்ரீ N. ஸ்ரீநிவாஸன் |
| 03.07.2025 | 19 | அஷ்டமி | வியாழன் | ஹஸ்தம் | கோடை உத்ஸவம் 7-ம் நாள். காலை பெருமாள், தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை வீதிபுறப்பாடு | ஸ்ரீ R.S. ராகவன் & ஸ்ரீ N.R. ஸ்ரீநிவாஸா சாரியார் |
| 04.07.2025 | 20 | நவமி | வெள்ளி | சித்திரை | ஸுதர்சன ஜயந்தி. மூலவர், உத்ஸ வர் திருமஞ்ஜனம், ஆஸ்தானம் | ஸ்ரீ N.R. ராமஸ்வாமி |
| 05.07.2025 | 21 | தசமி | சனி | ஸ்வாதி | பெரியாழ்வார் திருநக்ஷத்ரம். காலை பெருமாள், ஆழ்வார் திருமஞ்ஜனம். மாலை பெருமாள் சின்ன கருடன், ஆழ்வார் யானை வாஹனம், வீதிப்புறப்பாடு. ஆஸ் தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை. | ஸ்ரீ மாடபூசி ஸுதர்சனம் ஐயங்கார் பண்ட் |
| 06.07.2025 | 22 | ஏகாதசி | ஞாயிறு | விசாகம் | காலை பெருமாள் உத்ஸவர் திருமஞ்ஜனம் – மாலை – பெருமாள் வீதிபுறப்பாடு | ஸ்ரீமதி S. பாமா, C/o. N. ஸ்ரீகாந்த், பெங்களூரு |
| 07.07.2025 | 23 | த்வாதசி | திங்கள் | அனுஷம் | ஸ்ரீமந்நாதமுனிகள் திருநக்ஷத்ரம். காலை பெருமாள், நாத முனிகள் திருமஞ்ஜனம். மாலை வீதி புறப்பாடு, ஆஸ்தானம் ஸேவாகாலம், சாற்றுமுறை | திருமஞ்ஜனம்: ஸ்ரீமதி ருக்மணி அம்மாள் பண்ட். புறப்பாடு: ஸ்ரீ A. வாஸுதேவன் & N.V. பாலாஜி |
| 08.07.2025 | 24 | த்ரயோதசி | செவ்வாய் | கேட்டை | தொண்டரடிப்பொடியாழ்வார் | |
| 09.07.2025 | 25 | சதுர்தசி | புதன் | மூலம் | திருமால்வடை | |
| 10.07.2025 | 26 | பௌர்ணமி | வியாழன் | பூராடம் | காலை பெருமாள் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை பெருமாள் வீதிபுறப்பாடு | ஸ்ரீ N. ஸ்ரீநிவாஸன் |
| 11.07.2025 | 27 | ப்ரதமை | வெள்ளி | பூராடம் / உத்திராடம் | காலை பெருமாள், தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை தாயார் உள்புறப்பாடு | புறப்பாடு: ஸ்ரீ ஸ்ரீராமன் |
| 12.07.2025 | 28 | த்விதீயை | சனி | உத்திராடம் / ச்ரவணம் | ஸ்ரீ ஸுதர்சன ஹோமம். ஆளவந்தார் | |
| 13.07.2025 | 29 | த்ருதீயை | ஞாயிறு | ச்ரவணம் / அவிட்டம் | காலை பெருமாள், தேசிகன் திருமஞ்ஜனம். மாலை வீதிபுறப் பாடு. ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ N.R. கோவிந்தராஜன் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 14.07.2025 | 30 | சதுர்த்தி | திங்கள் | அவிட்டம் / சதயம் | பூதத்தாழ்வார் | |
| 15.07.2025 | 31 | பஞ்சமி | செவ்வாய் | சதயம் / பூரட்டாதி | காலை பேயாழ்வார் திருமஞ்ஜனம். மாலை வீதிபுறப்பாடு, ஆஸ்தானம் | ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அஸோஸியேஷன் |
| 16.07.2025 | 32 | ஷஷ்டி | புதன் | பூரட்டாதி / உத்திரட்டாதி | தக்ஷிணாயன புண்யகாலம். காலை பெருமாள், தாயார் மூலவர், தேசிகன் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை பொழுதுடன் ஆராதனம் பெருமாள் வீதிபுறப்பாடு | ஸ்ரீ S. ராமஸ்வாமி |

## வைணவ வழக்குச் சொற்கள் ⑩

**சித்தை:** எண்ணெய்த் துருத்தி; oil can

**சித்தப் படுத்தல்:** தயார் செய்தல்; பயன்படுத்தும் நிலைக்குக் கொண்டு வருதல்; making ready

**சிவம்:** சுத்தம்

**சீய்க்கை:** சுத்தம் செய்தல்; பெருக்குதல்

**சீயம்:** சிங்கம்

**சீயர்:** வைணவ சன்னியாசிகள் (சீயம் = சிங்கம்) - இன்றைய வழக்கில் ஜீயர் ஆகிவிட்டது!

**சீதன வெள்ளாட்டி:** பிறந்தகத்திலிருந்து திருமணச் சீராக உடன் வந்த பணிப்பெண்; also சீதனம்

**ஸுதர்சனம்:** சக்ராயுதத்தின் பெயர்

**சுவடு:** அடையாளம்

**சுவடர்:** இரசிகர்; தாகம் கொண்டவர்

**சுருளமுது:** வெற்றிலை

**சுமடு** (also சும்மாடு)**:** சரீரம்

**சூடாமணி:** தலையில் அணியும் இரத்தினம்

**சூடகம் :** கைவளை

**செம்பாதி:** சரிபாதி

**செல்வர்:** பஞ்ச பேரர்களுள் ஒருவர்; (கர்ப்ப க்ருஹத்தினுள் உத்ஸவர் முதலிய 5 பெருமாள் உண்டு)

**செம்மாது:** லக்ஷ்மி

**செவிப்பூ:** ஓர் ஆபரணம்

**சேதனன்:** ஜீவாத்மா

**சேஷ்டிதம்:** இன்புறும் விளையாட்டு; குறும்புச் செயல்கள்; pranks

**ஸேவாகாலம்:** திவ்யப் பிரபந்தங்களை, இரண்டு குழுவாகப் பிரிந்து

இரண்டிரண்டு அடியாக மாற்றி மாற்றி சந்தத்துடன் சொல்லுதல்

**ஸேவார்த்திகள்:** அடியவர்; வழிபட வருவோர்

**ஸேவித்தல்:** (பெருமாள், பெரியோரை) வணங்குதல்; ப்ரபந்தங்களை ஒலி அமைதியுடன் (சந்தம்) வழங்குதல்

**ஸேவை:** வழிபாடு; (இறைவன் திருவுரு) தரிசனம் ஆதல்; பெருமாள் காட்சி தரல்

**சேஷி:** நாதன்; தலைவன்; நியமித்து நடத்துபவன்

**சேஷன்:** அடிமை

**சேஷத்வம்:** இறைவன் ஒருவனையே உயிராகவும் அவனே நீதிபதி என்றும் உணர்ந்து அவனையே முழுதுமாகச் சார்ந்திருத்தல்

**சேமவைப்பு:** சேமித்து வைத்த தனம்

**சேவகன்:** வீரன்

**சொல்:** இலக்கண நூல் (வ்யாகரணம்)

**சோறாள்வி:** பரிமாறுபவர்; Server of food; சமையற்காரி / சமையற்காரர்

**சோதித்தல்:** தானியங்கள் போன்றவற்றைப் பயன் படுத்தும் முன் தூசி, தும்பு, கல் முதலியவற்றை அகற்றுதல்

**சோதித்துக் கொள்ளல்:** (கைகளை நீரினால்) தூய்மை செய்து கொள்ளல்

**சோபனம்:** நற்செய்தி

**ஸௌஹார்த்தம்:** நல்உள்ளம் உடையவனாய் இருத்தல்; நல்லெண்ணம்

**ஸௌலப்யம்:** எளிவந்த தன்மை; பெரியநிலையி லிருந்தும் எளியவிதமாகப் பழகுதல்

**சீயர் (ஜீயர்):** வைணவ ஸந்யாஸிகள்

**ஞாதி:** (தீட்டுக்குரிய) உறவினர்; சரீர ஸம்பந்தமுடைய உறவினர்

**'தென்னிந்திய வைணவம் - ஓர் அறிமுகம்'** நூலிலிருந்து

*(தொடரும்...)*

ஸ்ரீ:

# ஸ்ரீ தேசிகன் தமிழ்க் கவிதை

ஸ்ரீ உ.வே. N.R. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, மதுரை, வைகுண்டவாஸீ

1. பெரிய திருமொழி ஏழாம் பத்து 8-ம் பதிகம் 7-வது பாடலில் திரு அழுந்தூர் அக்ரஹாரங்களிலுள்ள ஸ்ரீவைஷ்ணவோத்தமர்களைத் திருமங்கையாழ்வார்,

*...செந்தமிழும் வடகலையுந்திகழ்ந்த நாவர்*
*திசைமுகனேயனையவர்கள் செம்மை மிக்க*
*அந்தணர் தமாகுதியின் புகையார் செல்வத்து*
*அணியழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே.*

என்றருளிச்செய்கிறார். இந்த அந்தணர்கள் உபயவேதாந்த ஸேவையாலும் அர்த்த க்ரஹணத்தாலும் உபயவேதாந்த ஜ்ஞான விசிஷ்டர்களாக விளங்கிக் கொண்டு ஔபாஸந அக்நிஹோத்ராதிகளையும், அநுஸ்யூதமாய் அனுஷ்டித்து வந்தார்களென்றும், அந்த ஜ்ஞானானுஷ்டானங்களால் திருவுள்ளமுகந்து தேவாதிதேவனாகிய ஆமருவிப் பெருமாள், இவ்விதம் ஜ்ஞானாநுஷ்டானங்களால் அலங்கரிக்கப் பெற்ற அழுந்தூரில் நித்யவாஸம் செய்கிறானென்றும் அருளிச்செய்கிறார்.

இங்கே செந்தமிழ் என்றது சங்க இலக்கண இலக்கியங்கள் எல்லாவற்றையும், திவ்ய ப்ரபந்தார்த்தங்கள் நன்கு விளங்குவதற்காகக் கற்றவர்கள் என்றும், அதேபோல், வடகலையும் என்றது வேதங்களின் அத்யயனத்துடன் அவைகளின் ஆறு அங்கங்களையும், பாஷ்யங்களையும் கற்று, 14 வித்யா ஸ்தானங்களிலும் தேர்ச்சி பெற்றவர்கள் என்றது. திகழ்ந்த - பிரகாசித்த; இவர்கள் நாக்கிலே ஸரஸ்வதி விலாஸம் பிரகாசிக்கிறது ஆனதால் ஒவ்வொருவரும் ஒரு ப்ரஹ்மாவைப் போல் விளங்குகிறார்கள் என்றபடி இங்கே திசைமுகன் என்றது. பிரமனுக்கு நான்கு வேதத்துக்கு நான்கு முகங்களும், நான்கு நாக்குகளும் உள்ளன, இவர்கள் ஒரு முகத்திலும், ஒரு நாக்கிலும், உபயபாஷா ஸம்பூர்ண ஸரஸ்வதி விலாஸமுள்ளவர்கள் என்னும் ஏற்றம் த்வனியில் கிடைக்கும் ரஸமாகும்.

2. ஸ்ரீ தேசிகன் தன் ப்ரபந்தஸாரத்தின் முத்திரைப் பாசுரத்தில் சந்தமிகு தமிழ்மறையோன் தூப்புல் தோன்றும் வேதாந்த குரு என்று மிகப் பெருமையாகச் சொல்லிக் கொள்ளுகிறார். இதை உற்று நோக்கில், இவர் தமிழ்மறையாகிய திவ்ய ப்ரபந்தங்களில் விசேஷ ஈடுபாடுடையவராய் அவைகளின் சொற்பொருள்களும், உள்ளுறை கருத்துக்களும் நன்கு புலனாகுமாறு சங்க இலக்கண இலக்கியங்களையெல்லாம் முறையே நன்கு கற்றுத் தேர்ந்து பெரும் புலமையடைந்திருந்தாரென்பதும் தெளிவாகும். தேசிக ப்ரபந்தம் 400 செய்யுட்களையும் ஊன்றிக் கற்கும் யாவரும் இவருடைய தமிழ்ப் புலமையை உணராதிருக்க முடியாது. ஆழ்வார்கள்



அருளிச் செய்துள்ள திவ்ய ப்ரபந்தங்கள் நாலாயிரத்திலும் உள்ள உயரிய பொருள்களையும், வேதசாஸ்த்ர விதிகளில் விளங்கும் உத்தம ரத்னங்களை யும், காலக்ஷேப க்ரந்த சதுஷ்டயங்களிற் கற்கும் உறுதிப் பொருள்களையும், ரஹஸ்ய த்ரயத்தின் எல்லாத் தத்வங்களையும், ஒரு புராணமும், சேர்த்து 400 பாசுரங்களில் சுருக்கியமைத்திருக்கும் திறன், அமானுஷ்யமும், அதிமானுஷ்யமும் ஆனதே. தமிழ்ப்பாவகை நான்கில், வஞ்சியொழிந்த மற்ற வையான வெண்பா, ஆசிரியம், கலி ஆகிய இம்மூவகைப் பாக்களையும், அவைகளின் பல பேதங்களுடனும், சந்த பேதங்களுடனும் ஸ்வாமி மிகத் திறமையுடன் கையாண்டிருக்கும் பெருமை போற்றத் தக்கது.

3. மஹா கவிகள் என்று பெயர் பெற்ற கம்பன், காளிதாஸன் முதலானோர் கதைகளைக் காவ்யங்களாகவும், நாடகங்களாகவும் எழுதி அவை களில் உவமை, உருவகம், உத்பிரேக்ஷை, உல்லேகம் முதலியவைகளை அமைத்துக் கற்போர் மனம் களிக்க நூல்களியற்றிப் பெயரெடுத்து விளங்குகிறார்கள். அவர்கள் நூல்களில் ஒவ்வோரிடத்தில் ஆத்யாத்மசாஸ்த்ர விஷயம் விரவி வரும். அதைப் பிழையில்லாமலும் வேத சாஸ்த்ர ஸம்மதமான நல்ல பாஷையிலும் அவரவர் அமைத்துத்தரும் திறனையும், உரைகாரர்களும் புலவர் பெருமான்களும் மிகவும் போற்றி மெச்சுவர். தேசிக ப்ரபந்தத்தில் முதலிலிருந்து கடைசி கடைசிவரை ஸ்வாமி நிர்வஹிக்கும் விஷயங்கள் எல்லாமே அத்யாத்ம

சாஸ்த்ர விஷயங்கள். இவைகளில் ஒவ்வொன்றும், வேதங்களிலும் உபநிஷத்துக்களிலும் தோன்றி தர்ம சாஸ்த்ராதிகளால் வலியுறுத்தப் பெற்று, இதிஹாஸ புராணங்களை உபப்ரும்ஹணங்களாய்க் கொண்டு ஸ்ரீ பகவத்கீதை ப்ரஹ்ம ஸூத்ரங்கள் இவைகளிற் பொதிந்து ஆழ்வார்களுடைய அருளிச் செயல்களால் ஸமஸ்கரிக்கப் பெற்று, பராசரர், சடகோபன், பரகாலன் இவர்களிடம் பரீக்ஷை கொடுத்துத் தேறி, ஸ்ரீமந்நாதமுனிகள், ஆளவந்தார் இவர்களால் ஸாதுவென்று அங்கீக்ருதமாய் ஸ்ரீராமானுஜனுடைய சொத்தாகி அவருடைய அருள் மிகுதியால் நமக்களிக்கப்பெற்று மறுபடியும் ஸ்ரீ தேசிகனால் ஸம்சோதனமாகி நமக்குத் த்ரிரக போஷகமாய் விளங்குவன.

இந்த முடிந்த பொருள்களைக் குறித்து கீதாசார்யன் பேசும்போது **ரிஷிபிர் பஹுதா கீதம், கந்தோபிர் விவிதை: ப்ருதக், ப்ரஹ்ம ஸூத்ரபதைஸ்சைவ, ஹேது மத் பிர்விநி ஸ்சிதை:** என்று இவைகளின் ஏற்றத்தை மெச்சு கிறான். அத்தகைய கௌரவம் வாய்ந்த அரும்பெரும் அத்யாத்மப் பொருள்களையும், முடிவுகளையும் ஒரு சிறிதும் ஸந்தேஹ விபரீதார்த்தங்களுக்கு இடமின்றித் தக்க தமிழ்ப் பதங்களைப் பொறுக்கியும், யாப்பிலக்கணம் ஒரு சிறிதும் வழுவாமலும் எளிதான உயர்ந்த தமிழில் பாக்களாக ஆக்கித் தந்திருக்கிறார்.

4. மேலே கூறியவற்றைச் சில உதாரணங்களால் நிரூபிக்கலாம். தமிழ்மொழியிற் சில சொற்கள் பெயர்ச் சொற்களாக ஒரு படியிலும், வினைச் சொற்களாக இன்னொரு படியிலும், பொருள் கொள்ளத் தக்கவையாயிருக்கும்.

அதிகார ஸங்க்ரஹத்தின் 46-வது பாட்டும், அம்ருதாஸ்வாதினியின் 10-வது பாட்டுமான 'ஒண்டொடியாள்' என்று தொடங்கும் பாடலை யெடுத்துக் கொள்வோம். அதன் 3-வது பதம் 'தண்டுளவ மலர் மார்பன்' என்று தொடங்குகிறது. இந்தத் தொடர் மொழிக்கு 'குளர்ந்த திருத்துழாயுடன் பூவைத் திருமார்பிலணிந்தவனுமான கண்ணபிரான்' என்று அழகான ஸம்ப்ரதாய வ்யாக்யானம் உண்டு. இதில் துளவம், துளசி மலர்ப்பூ, இவையிரண்டும் பெயர்ச் சொற்கள். துளவம் மலர் இவையிரண்டும் சேரும்போது மவ்வீறொற்றழிந்து 'துளவ மலர்' என்றே சேர்ந்து நிற்கும். அதனால் அந்தப் பொருள் சரியானது. ஆனால் 'துளவுதல்' என்னும் விளைச் சொல்லுக்கு ஆராய்தல் விசாரித்தல், தேடுதல்' என்னும் பொருள்களும் 'மலர்தல்' சொல் லுக்குத் 'தோன்றுதல், விரிதல், காணப் படுதல் ஸாக்ஷரத்காரமாதல், என்னும் பொருள்களும் உண்டு. இவை வினைச் சொற்கள். இவ்விதம் பொருள் கொண்டால் 'துளவ'மென்பதற்கு வினையெச்சமாக வேதி சாஸ்த்ர ப்ரமாணங்களால் விசாரிக்கவும், வேதவிஹிதமான அஷ்டாங்க யோகாதி மார்க்கங்களால் தேடவும், 'மலர்' தோன்றுகிற, ஸாக்ஷாத்காரமாகிற, 'தண்மார்பன்' ஸ்ரீதேவி நித்யவாஸம் செய்வதால் தானும் குளிர்ந்து உலகனைத்துக்குமுள்ள எல்லாத் தாபங்களையும் போக்கடித்துக் குளிரச் செய்யும் மார்பையுடையவன், என்பது பொருளாகும்.

மார்பென்பது ஹ்ருதயத்தைக் குறிப்பதாதலின் ஜீவன்களிடத்தில் பகவானுக்குள்ள ஸௌஹார்த்தம் சொல்லப்படும் விஷயமென்று பொருளாகி, முன்னே மன்னவர்க்குத் தேர்ப் பாகனாகி நின்ற ஸௌலப்யமும், பின்னே உபதேசித்த தனித்



தருமமாகிய சரணாகதியும் இந்த ச்லோகார்த்தத்தின் விளைவுகளே என்று மத்ய மாணிக்கமாய் நின்று முன்பின் பொருள்களிரண்டையும் தோற்றுவித்து அலங்காரம் செய்து தானும் அலங்கரிக்கப் பெறுகிறது. இதில் தேஹளீசன் பெருமையும் உள்ளுறைப் பொருளாக அமைந்திருத்தல் கருதத் தக்கது. பொய்கைமுனி, பூதத்தார், பேயாழ்வார் மூவரும் திருக்கோவலூர் இடைகழியில் சேர்ந்தார்கள். இவர்களெல்லாரையும் நெருக்கும் நாலாவது மஹா புருஷனை **வையம் தகளியா, வார்கடலே நெய்யாக, வெய்ய கதிரோன் விளக்காக...** புற உலகமாகிய விச்வத்தில் (விச்வம் என்பது ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் முதல் நாமம்) பொய்கைமுனி துளவினார். **அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக, இன்புருகு சிந்தை இடு திரியா...** பூதத்தாழ்வார் விஷ்ணுவாக அகவுலகத்தில் துளவினார். மூவரும் மனங்களிக்கவும், பெருமான் திருமார்பம் ஸேவையாய் மலர்ந்தது. அதை ஸேவித்துப் பேயாழ்வார் **திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்** என்று மகிழ்ச்சியடைகிறார்.

இவ்விதம் இவன் தண்மார்பு துளவமலர் மார்பென்க. பக்தனுக்குத்தேரோட்டினஸௌலப்யமும்திருவடியில் அடைந்தவர்களை எல்லாப் பாபங்களினின்று விடுவிக்கும் ஸௌசீல்யமும், துளவமலர் தண்மார்பின் ஸௌஹார்த்தத்திற் ப்ரதிஷ்டிதமென்பது ஸ்வாமியின் திருவுள்ளமாதல் சாஸ்த்ரார்த்த ஸித்தம்.

5. அதே பாடலில் 'அடிசூட விலக்காய் நின்ற' என்றும் ப்ரயோகித்திருப்பது ரொம்ப ஸ்வாரஸ்யம். அதற்கு வ்யாக்யாதாக்கள், 'விலக்காய் நின்ற' என்ற மட்டில் பதம் பிரித்துத் 'தடையாயிருந்த' என்று மட்டில் பொருள் செய்திருக்கிறார்கள். அது போதாது.

சூட என்னும் சொல்லோடு இலக்காய் என்னும் சொல் சேரும்போது 'வ்' எனும் உடம்படு மெய் தோன்றி 'சூட விலக்காய்' என்று ஆகும். சரம ச்லோகத்தின் ஸ்வாரஸ்யத்தையுணர்ந்து, சரணாகதியை அனுஷ்டித்து உஜ்ஜீவிப்பவனை இலக்காய் நின்ற என்றும், இதை யநுஷ்டிக்காதவரை விலக்காய் நின்ற என்றும் அந்தத் தொடர்மொழி பேசுகிறது. கண் புதையல் விளையாட்டில் கண்ணைப் பொத்திவிடப்பட்டவன் மாயை. இந்த மாயையின் கையில் அகப்பட்டவன் விலக்காய் நின்று, தான் பொத்திக் கொள்பவன், மாயை இடத்தில் அகப்படாமல், தப்பியோடித் தாய்ச்சியைத் தொட்டவன், தனித்தருமத்துக்கு இலக்காய் நின்று, சரணாகதியை அனுஷ்டித்துத் தாய் (திருமகள்) மூலம் பகவானையடைபவன். தமிழ் இலக்கணம் புணரியல் விதியால், சரணாகதனுக்கும் அதை அனுஷ்டியாதவனுக்கும் ஏற்படும் பலன்களை ஒரே சொற்றொடரில் அமைத்து இந்த லீலா விபூதியை ஒரு கண் புதையல் விளையாட்டாக உருவகப்படுத்திப் பாட்டமைத்திருப்பது எந்தப் புலவரும் மெச்சத் தக்கதாகும்.

6. இனி, அம்ருதாஸ்வாதினி 27-வது பாடலில், 3-வது வரி, ஸ்ரீ வைஷ்ணவர்கள் சாதாரணமாகப் பேசும் பேச்சைக் குறித்து, **மாசில் மனம் தெளி முனிவர் வகுத்தவெல்லாம் மாலுகந்த வாசிரியர் வார்த்தைக் கொவ்வா** என்கிறார். இதற்கு 'மனத்தெளிவுடைய மஹர்ஷிகள் விளக்கி வெளியிட்ட (ஸ்ம்ருதி புராணமாகிய) வெல்லாம், எம்பெருமானுடைய க்ருபைக்கு உரியரான (நம்மாழ்வார் முதலிய) ஆழ்வார் ஆசார்யர்களின் ஒரு வார்த்தைக்குச் சமமாகா.' இந்தப் பொருளின் முதல் பாதியை ஒருவாறு அங்கீகரிக்கக்கூடுமானாலும் பிற்பாதி, பகவத்க்ருபைக்குப் பாத்ரமான ஸாதாரண ஸ்ரீ வைஷ்ணனையே குறிக்கிறது. தமிழிலக்கணம் நூல்களை வகைப் படுத்தும்போது முதல் நூல், வழி நூல், சார்பு நூல் என்று மூன்று பாகுபாடு செய்து, 'வினையின் நீங்கி, விளங்கிய அறிவின் முனைவன் கண்டது முதனூலாகும்' என்று முதனூலுக்கு இலக்கணம் வகுக்கிறது. இந்த ஸூத்ரத்தின் முதற்பாகமாகிய வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவனை ஸ்வாமி தன் சொந்தத் தமிழில் 'மாசில் மனந்தெளி முனிவர்' என்று ஆக்கியிருப்பது நோக்கத் தக்கது. எம்பெருமான் க்ருபைக்குப் பாத்ரமான ஆசிரியர் எல்லாரும் மாலுகந்த வாசிரியர். இங்கே மாலுகந்த என்பது வேற்றுமைத் தொகை. மால் உகந்த என்று முதல் வேற்றுமை தொடங்கி, மாலை, மாலால், மாலுக்கு என்று வரிசையாக 2 முதல் 7 வேற்றுமையுருபுகளையும் கூட்டிப் பொருள் கொள்ள வேண்டியது. ஸ்வாமி, வார்த்தைக்கொவ்வா என்று செய்திருக்கும் ப்ரயோகம் திருக்குறள் 415-ன் கருத்தைத் தழுவியெழுந்தது. **இழுக்கலுடை யூழியூற்றுக் கோலற்றே, ஒழுக்கமுடையார் வாய்ச் சொல்** என்னும் குறளில் வாய்ச்சொல் என்பதை வார்த்தையென்றுப் ப்ரதிபதத்தால் ஸ்வாமி வ்யவகரிக்கிறார். ஒழுக்கமுடையார் எல்லாரும் பகவத் ப்ரீதிக்குப் பாத்ரமானவர்கள் என்பது ஸ்வாமி திருவுள்ளம்.

7. இனி, **காகம் பிழைத்திடக் கண் ணழிவே செய்தகாகுத்தனே** என்று காகாஸுர வ்ருத்தாந்தத்தைச் சொல்லுகிறார். இங்கே காகம் அபசாரப் பட்டதும், அனுக்ரஹிக்கப் பெற்றதும், 'பிழைத்திட' என்னும் ஒரு சொல்லால் நிர்வாஹம். 'பிழைத்தல்' என்னும் சொல்லுக்குக் குற்றம் செய்தலென்பது பொருள். பிராட்டியிடத்தில் மஹத்தான குற்றத்தை அந்தக் காகம் செய்ததைப் 'பிழைத்திட' என்னும் சொல் குறிப்பிடுகிறது. அதற்குத் தண்டனை, கண் ணழிவைச் செய்து, தான் ஏவிய ப்ரஹ்மாஸ்த்ரத்தின் மூலம் அதனுயிரை வாங்காமல் அதைப் பிழைத்திட (உயிரோடிருக்க) அனுக்ரஹித்தான். சாகும் தறுவாயில் இருப்பவர் மறுபடி உயிர்பெற்று எழுதலுக்கும் பிழைத்தல் என்னும் சொல் ப்ரயோகிக்கப்படுகிறது. ப்ரஹ்மாஸ்தரத்தால் சாக இருந்த காகம் பிழைத்திட, மறுபடி உயிருடையதாக, என்று சொல்லுக்கு இரட்டுற மொழிதல் என்னும் இலக்கணப் ப்ரயோகத்தால் அதன்

குற்றத்தையும் பகவான் அனுக்ரஹத்தையும் ஒரே சொல்லால் விளக்கும் திறன் அஸாதாரணமானது.

8. இனி, ஸ்ரீ தேசிகனுடைய கவியமைக்கும் பெருந்திறன், மெய்விரத மான்மியத்தில் விசேஷமாகக் காணப்படுகிறது. அந்த நூலில் 12-வது பாடல் ப்ரஹ்மாவை விட்டு ஊடலிற் பிரிந்திருந்த ஸரஸ்வதி இவர் அழைப்பிற்கிணங்கி வரும்போது மிகக் கோபமுடையவளாக வருதலை 13 சீர்களின் லான ஆசிரியச் சந்த விருத்தத்தால் வர்ணிக்கிறார். அதில் ஸரஸ்வதி வருகையை நேரில் மனக்கண்ணால் காண்கிறோம். அவள் ஆறாக வரும் ஆறு, அந்தப் பாடலின் கதியிலே ஒலிக்கிறது. ஸ்ரீ ஹஸ்திகிரி வரதன் ஆவிர்ப்பவித்தவுடன் தேவதைகள் திருச்சின்னம் ஊதி அனுபவித்த படியைத் தன்மை நவிற்சியென்னும் லக்ஷணயுக்தமாக 18-வது பாடலில் கூறுகிறார். அது பன்னிரு சீராசிரிய விருத்தம். ஒவ்வொரு அங்கத்தையும் உவமையோடு விளக்குகிறது. இது மகுடத்தில் தொடங்கித் திருவடியில் முடியும் மர்மம் ஸ்ரீ தேசிகனுக்குத்தான் தெரியும். பாட்டு மிக ப்ரஸாத குணமுடையதாய் மனதைக் கவர்கிறது.

அதனடுத்த 19-வது பாடல் இந்த நூலுக்குள்ளே நீண்ட பாடலாகிய 28-சீராலான ஆசிரிய விருத்தம் இந்தப் பாடலை விஷ்ணு புராணத்திலும், ஸ்ரீ பாகவதத்திலும் பல இடங்களில் வரும் பகவத் ஸ்தோத்ரங்களை மனதிற்கொண்டு, இந்த மெய்விரத மான்மியமாகிய புராணத் துக்கு அவ்விதமான ஸ்தோத்ரம் ஒன்று வேண்டுமென்று, அதை 16 அடிகளாலாக்கி, அதில் ப்ரஹ்மஸூத்ரங்களில் 16 பாதங்களால் பேசப்படும் பகவத் குணங்களை யெல்லாம் ஸ்ரீ பகவத் ராமானுஜ ஸித்தாந்தத்திற்கு ஏற்பப் பாடியுள்ளார். இதன் ஒவ்வொரு பாதத்திலும் ஒவ்வொரு குணம் கூறப்பெற்று அதனதன் கடைசியில் இறைவனார் என்று தொடங்கித் தலைவனார் என்றும் வரை 15 ‘ஆர்’ களால் பகவான் குணங்களைக் கூறி 16-வது பாதத்தில், ‘என்றும் என்னை இகழ்விலன் காண்மினே‘ என்று நம்மாழ்வாருக்கு மதுரகவிகள் குறிப்பிட்ட குணமும் பேரருளாளனுடையதுதான் என்று தலைக் கட்டுதல் மிகவும் ஆச்சர்யமான ஸம்ப்ரதாய ப்ரகடன வெற்றியாகும்.

இனி 21-வது பாடலில் 14-சீர் சந்த விருத்தத்தால் உபய நாச்சியாருடன் பெருமாள் ஸேவை தருதலை எவ்விதமாயெல்லாம் பேசலாம், பயிலலாம், ஓதலாம், பரவலாம், குலாவலாம், எண்ணலாம் என்று சொல்லும் வகையை ஆறு சொற்களாலும் அனுபவிக்கும் விதங்களை இரண்டு முதல் ஐந்தினாலும் கூறுகிறார். இதிலுள்ள சந்த விருத்தங்களெல்லாமே நாட்டியக் கலையின் இலக்கணங்களையொட்டி அமைந்திருப்பன.



ஆனதால் அபிநயம் பிடித்து மேடையில் நடிக்கவென்றே பாடப்பெற்றுள்ளன. 22-வது பாடலில் உயிர் வர்க்கத்துக்கு இன்றியமையாத ஆறு பொருள்களைத் தேர்ந்தெடுத்து அவைகளெல்லாம் பேரருளாளர்தானென்று லக்ஷணையால் கூறுகிறார்.

இனி 28-வது பாட்டில் இந்தப் புராண ஸாரத்தைப் புகன்று 29-வது பாடலில் இந்தப் புராணம் தான் தோன்றியாக, ஸ்வாமி செய்ததல்லவென்றும், அருளாளர் திருவடிகளைப் பரிவோடு ஸேவித்ததால் ஸாக்ஷாத்கரித்ததென்றும் கூறித் தலைக்கட்டுகிறார். கடைசியடியாகிய **கையிற் கனி போலக் கண்டு** என்று முடித்திருப்பது ஸ்ரீமத் ராமாயணத்தை வால்மீகி பகவான் ஸாக்ஷாத்கரித்ததைச் சொல்லும். **கரப தரஸமாநம் வீக்ஷ்ய த்ருஷ்ட் யாப்ரதீச்யா** என்னும் ப்ரஸித்தியான வாக்கியத்தை அனுகரிப்பதைக் காண்க.

**9. கடல் கண்டேன் என்பார் யாவரே முடியக் கண்டார்** என்பது ஆன்றோர் மொழி. ஸ்ரீ பகவானுடைய கண்டாவதாரமான ஸ்ரீ தேசிகன், சப்தப்ரஹ்மத்தின் உருவன், இந்த சப்தக் கடல்தான் சேதனனுக்கு ப்ரமாணம். அந்த ப்ரமாணங்களை யெல்லாம் தென் மொழியிலும் வெளியிட்டருள வேண்டுமென்று ஸங்கல்பித்து ஸ்வாமி அதை ஸர்வவிதத்திலும் தலைக்கட்டி, ஆழ்வார்கள் திருவுள்ளத்தை அனுகரித்துத் தமிழ்மொழியை வளம்பெறச் செய்திருப்பது தமிழர்களின் பரம பாக்யம் என்று ஸவிநயம் கூறுகிறேன். உதாரணங்களாக மேலே காட்டியிருக்கும் நயங்களும் ரஸங்களும் ஸ்ரீ தேசிகனுடைய ஒவ்வொரு பாடலிலும் காணக்கிடக்கின்றன. ஓசை நயம் இவருடைய தனித்த தனம். இவர் பாடல்கள் மணியோசைகளே. ப்ராஜ்ஞர்கள் பதேபதே இதையுணர்ந்தனுபவிக்க ஏதோ சில எடுத்துக் காட்டுமாறு அடியேனை நியமித்தவர்களுக்கு, அடியேன் க்ருதஜ்ஞதையைச் செலுத்துகிறேன்.

Sponsorships and donations towards publication expenses are welcome





## கடை வெள்ளிக்கிழமை







ஸ்ரீ:





## ப்ரஹ்மோத்ஸவம்













ப்ரஹ்மோத்ஸவம்











## ப்ரஹ்மோத்ஸவம்







ப்ரஹ்மோத்ஸவம்





ப்ரஹ்மோத்ஸவம்









## ப்ரஹ்மோத்ஸவம்









# ப்ரஹ்மோத்ஸவம்


















ப்ரஹ்மோத்ஸவம்










## ப்ரஹ்மோத்ஸவம்








## ப்ரஹ்மோத்ஸவம்









கருடவேகா
GARUDAWEGA
we deserve to serve
International Courier & Cargo
9840110784 / 9840113498
GARUDAWEGA

ஸ்ரீ:







ப்ரஹ்மோத்ஸவம்










விடாயாற்றி உத்ஸவம்



ஸ்ரீ:





**நம்மாழ்வார் திருநக்ஷத்ரம்**






## ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் மங்களாசாஸனம்







ஸ்ரீ:



ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் மங்களாசாஸனம்



ஸ்ரீ:

# எது நிலையான ஆனந்தம்?

ஸ்ரீ சோகத்தூர் ஸ்ரீவத்ஸன், நங்கநல்லூர்

இந்த ஸம்ஸாரத்தில் ஒரு மநுஷ்யனுக்கு எது ஆனந்தத்தைக் கொடுக்கிறது? நல்ல கல்வி, குறையாத செல்வம், அன்பான மனைவி, மக்கள் மற்றும் சுற்றம், ஆரோக்யமான தேஹம், எது வேண்டும்-எது வேண்டாம் என்பதில் தெளிவு, இருப்பதற்கு நல்ல வீடு, நற்பழக்கவழக்கங்கள், ஆழ்ந்த உறக்கம் என்று சொல்லிக் கொண்டே போகலாம். இவையெல்லாம் நிலையானதா? தடையில்லாமல் அனுபவிக்கக் கூடியவையா? இல்லையென்றால் நிலையான ஆனந்தம் எது?

தைத்திரீய உபநிஷத் - ஆனந்தவல்லீ, மநுஷ்ய ஆனந்தத்தை விளக்க ஒரு கல்பனையைச் செய்து காட்டியது.

**யுவா ஸ்யாத் ஸாது யுவாऽத்யாயக: ஆசிஷ்டோ த்ருடிஷ்டோ பலிஷ்ட: । தஸ்யேயம் ப்ருத்வீ ஸர்வா வித்தஸ்ய பூர்ணா ஸ்யாத் । ஸ ஏகோ மாநுஷ ஆனந்த:**

ஒரு மனிதன் இளமை குறையாமல் முறைப்படி ஒரு குருவிடம் இருந்து வேத அத்யயனம் செய்து, அதைப் பிறருக்கும் பயில்விக்கும் திறமை பெற்று, எந்த செயலையும் விரைவில் முடிக்கும் திறன் பெற்று, முறைப்படி சாப்பிட்டதை ஜீரணித்துக் கொள்ளும் ஆரோக்யம் பெற்றவனாய், பெரியோர்களின் ஆசீர்வாதத்தை என்றும் பெற்றவனாய், மன உறுதி உள்ளவனாய், உடற்கட்டு மிகுந்தவனாய், எடுத்த செயலை முடிக்கும் உறுதிப்பாடு உடையவனாய், உடல்-மனம் முதலான பல்வகையான பலம் பெற்றவனாய் இருக்க வேண்டும். இவ்வளவுக்கும் மேலாக, செல்வம் நிரம்பியவனாக இருந்து, இந்த உலகம் முழுவதும் அவன் ஒருவனது ஆளுகைக்கு உட்பட்டிருக்க வேண்டும். இப்படி அமையுமானால் அவனது ஆனந்தம் ஒரு 'மாநுஷ ஆனந்தம்' என்று காட்டியது.

இவற்றுள் ஒன்று தடையில்லாமலோ பூர்த்தியாகவோ அமைவதே துர்லபம். ச்ருதி இப்படி அடுக்கிக்கூறுவது போல எல்லாம் முழுவதுமாக ஒருவனிடம் அமைவது என்பது அஸம்பவம்.

இத்தகைய மாநுஷாநந்தத்தைப் போன்று நூறு மடங்கு உள்ளது மநுஷ்ய-கந்தர்வர்களின் ஆனந்தம். அதைப் போல் நூறு மடங்கு அதிகம் தேவ-கந்தர்வர்களது என்றவாறு பத்து வகை



களைக் கூறி, பித்ருக்கள், ஆஜாநஜ தேவர்கள், கர்ம தேவர்கள், தேவர்கள், இந்த்ரன், ப்ருஹஸ்பதி, பிரமன் என்றபடி பிரித்துத் தனித்து தனித்துக் கூறியது. இப்படி அடுக்கிக் கொண்டே போய் இறுதியில் வாக்கு மற்றும் எண்ணத்திற்கு அப்பாற்ப்பட்ட ஆனந்தத்தை ஸர்வேச்வரன் பெற்றிருக்கிறான்' என்று உத்கோஷித்தது.

*ஸ்வாமி ஆளவந்தாரோவென்னில்,*
*உபர்யுபர்யப்ஜபுவோ஽பி பூருஷாந்*
*ப்ரகல்ப்ய தே யே சதம் இத்யநுக்ரமாத்|*
*கிரஸ்த்வதேகைக குணாவதீப்ஸயா*
*ஸதா ஸ்திதா நோத்யமதோ஽திசேரதே||*
(ஸ்தோத்ர ரத்னம் - 19)

என்று ச்ருதிவாக்யத்தை அடியொற்றி ஸாதித்தார்.

நிற்க, கீழே கூறிய ப்ரமாணங்கள் மூலமாக நாம் அறியும் இன்னொன்று, ஒரு மநுஷ்யன் அடையக்கூடிய ஆனந்தத்தைக் காட்டிலும் பல்லாயிரம் மடங்கு அதிகமான ஆனந்தத்தைச் சதுர்முக ப்ராஹ்மணானவன் அடைகிறான் என்பது.

இப்படிப்பட்ட ஒரு ஆனந்தம் வேண்டாம் என்று புறக்கணிப்பவர் எவரேனும் உண்டோ? உண்டு. அதுமட்டுமின்றி, இப்படிப்பட்ட ஆனந்தத்தைக் கொடுக்கக்கூடிய பிறவிகளைக் காட்டிலும் திருவேங்கடமலையில் குருகு, மீன், ஆறு, மரம் முதலிய ஜங்கம அல்லது ஸ்தாவரப் பொருள்களில் ஏதேனுமாக ஒரு பிறவியை வேண்டினார் ஒருவர். ஆம்!

யார் அவர்?

கௌஸ்துப மணியின் அம்சமாக அவதரித்த கொல்லிகாவலன், கூடல்நாயகன் கோழிக்கோன் குலசேகரன் தான் அவர்!

மலையப்பன் மீது மட்டற்ற பக்தி கொண்ட மஹாவிவேகியான ஸ்வாமி குலசேகராழ்வார், பெருமாள் திருமொழியின் 'ஊனேறு செல்வத்து' பதிகத்தில் திருவேங்கடமலையில் ஒரு அசேதன பொருளாகவோ, ஜங்கமப் பொருளாகவோ அல்லது ஸ்தாவரமாகவோ இல்லை ஏதேனுமாகவோ ஓர் வாழ்ச்சி கிடைக்கப் பெற்றால் அதுவே போதுமானது, அதிலும் தேவர், மநுஷ்ய ஜாதியன்றி விவேகமில்லாதொரு திர்யக் ஜாதியாகப் பிறப்பதும் தமக்குப் பரமோத்தேச்யமாகும் என்றார். வலிமை மிக்க உடலில் அருமையான அழகிய புஜங்களும் மார்புகளும் கொண்ட வீர வாழ்க்கை, அளவில்லாத செல்வத்துடன் அரம்பையர்களால் சூழப்பட்டு வானுலகத்தை ஆளும் பெரும்



வாய்ப்பு, நடுக்கத்தை விளைவிக்கும் மதம் பிடித்த யானையின் மேல் ஒரு அம்பாரியில் வீற்றிருந்து இன்பத்தில் அமர்ந்திருக்கக் காரணமான செல்வமும் அதனைத் தரக்கூடிய ஒரு அரசாட்சி, மின்னலைப் போன்ற நுட்பமான இடையைக் கொண்ட ஊர்வசி, மேனகை போன்றவர்களின் ஆடல்-பாடல், அரசர்களுக்கெல்லாம் சக்ரவர்த்தியாக, ஆகாயத்தில் சிறந்து வ்யாபிக்கும் பூர்ணசந்திரனைப் போன்ற வெண்ணிறமான குடையின் நிழலிலே வீறுடனிருந்து மகிழும்படியான ஸம்பத்து என்று வேதத்தால் மநுஷ்ய ஆனந்தம் என்று அடையாளப்படுத்தப்பட்ட அத்தனை போகங்களும் அத்திருமலை வாழ்ச்சிக்கு விரோதியாய் இருக்கும் பொருட்டு அவையனைத்தும் எனக்கு ஒரு நாளும் வேண்டா, என்று ஸாதித்தருளினார்.

குறிப்பாக:

*உம்பர் உலகாண்டு ஒரு குடைக் கீழ் உருப்பசி தன்*
*அம் பொற் கலை அல்குல் பெற்றாலும் ஆதரியேன்*
*செம் பவள வாயான் திருவேங்கடம் என்னும்*
*எம் பெருமான் பொன் மலை மேல் ஏதேனும் ஆவேனே.*
(பெருமாள்திருமொழி 4-10)

என்றார்.

'மேலுலகங்களையெல்லாம் ஒரு கொற்றக் குடையின் நிழலிலே அரசாண்டு, ஊர்வசியினுடைய அழகிய பீதாம்பரமணிந்த அல்குலை அடையப் பெறினும் (அதனை) விரும்பமாட்டேன்; சிவந்த பவழம் போன்ற வாயையுடையனான எனது அப்பனுடைய திருவேங்கடமென்ற பெயரையுடைய அழகிய திருமலையின் மேல் ஏதேனுமொரு பதார்த்தமாகப் பிறக்கக் கடவேன்,' என்று சொல்லி திருவேங்கடமுடையானை அடைந்து அவனுக்கு ஏதோ ஒரு விதத்தில் கைங்கர்யங்கள் பண்ணுவதே பரம ப்ராப்யம்; அதுவே பரமாநந்தத்தைத் தரவல்லது என்று பதிக்கத்தைத் தலைக்கட்டினார்.

ஆழ்வார் இப்பதிகத்தில் காட்டியருளிய வைராக்யத்தை ஸ்வாமி தேசிகன் தயாசதகத்தில் இரண்டு ச்லோகங்களைக் கொண்டு (41 - 42) உபஸம்ஹாரம் பண்ணுகிறார்:

*ஆஜ்ஞாம் க்யாதிம் தநமநுசராநாதிராஜ்யாதிகம் வா*
*காலே த்ருஷ்ட்வா கமலவஸதேரப்யகிஞ்சித்கராணி|*
*பத்மாகாந்தம் ப்ரணிஹிதவதீம் பாலநே஽நந்யஸாத்யே*
*ஸாராபிஜ்ஞா ஜகதி க்ருதிந: ஸம்ச்ரயந்தே தயே த்வாம்||*

*ப்ராஜாபத்ய ப்ரப்ருதி விபவம் ப்ரேக்ஷ்ய பர்யாய து:க்கம்*
*ஜந்மாகாங்க்ஷந் வ்ருஷகிரிவநே ஜக்முஷாம் தஸ்துஷாம் வா|*
*ஆசாஸாநா: கதிசந விபோஸ் த்வத் பரிஷ்வங்க தந்யை:*
*அங்கீகாரம் க்ஷணமபி தயே ஹார்த துங்கைரபாங்கை:||*

எல்லாவற்றிலும் மிக உயர்ந்தது ப்ரஹ்மனுடைய ஸ்தாநம். அவன் சிவன், இந்திரன் போன்ற எல்லாத் தேவர்களையும் காட்டிலும் மேம்பட்டவன். ஸ்ரீமந் நாராயணின் நாபிக்கமலத்தில் தோன்றிய அவனுடைய கட்டளை செல்லாத இடமில்லை. எல்லையில்லாத புகழ், செல்வம், இவனை அண்டி, இவனுக்குத் தொண்டு புரியும் தேவர்கள் என இவனுடைய பெருமைகளைப் பேசித் தலைகட்ட முடியாது. ஆனாலும் இது நிலையற்றது. பிரமன் என்ற அதிகாரம் உள்ளவரையில் மட்டுமே இப்பெருமைகளலெல்லாம் இவனுக்கு உண்டு. இந்த ஸ்தானம் பெறக் காரணமான புண்ணியம் கழிந்து விட்டால் கீழ்க்கூறிய எல்லாப்பெருமைகளும் காணாமல் போகும். சதுர்முக ப்ரஹ்மனுக்கே இந்த நிலை என்றால் நம்மைப் போன்றவர்களுக்குக் கேட்க வேண்டுமா? ஆகவே ஸம்ஸார ஸாகரத்தில் எத்துணைச் சிறப்புகள் வந்தாலும் அவை எல்லாம்



ஒரு காலத்தில் அழிந்து போகக்கூடியவையே. அவை நிலையான ஆனந்தத்தைத் தருவது கிடையாது.

அதனாலேயே குலசேகராழ்வார் போன்ற பரம பக்தர்கள் சிலர் பிரமன், இந்திரன் முதலியவர்களின் ஐஸ்வர்யம் முதலிய அனைத்திலிருந்தும் பெறக்கூடியதான இன்பானது அல்பமானதே; மேலும் அவையனைத்தும் அளவு கடந்த துன்பத்திலேயே முடிகின்றன என்றனர். ஆதலால் அம்மஹான்களுக்கு அதுபோன்ற செல்வங்களில் சிறிதும் நாட்டமில்லை. அவர்கள் திருவேங்கடமலையில் உள்ள ஒரு வனத்தில் குருகு, மீன் முதலிய ஜங்கமப் பொருளாகவாவது, ஆறு-மரம் முதலிய தாவரப் பொருளாகவாவது பிறவியை ஆசைப்பட்டனர். இப்பிறவி பிரமன் மற்றும் இந்திரனின் செல்வத்தினும் மேம்பட்டதாக அவர்கள் கருதக் காரணம் திருமலையில் ஏதாவது ஒரு வஸ்துவாகப் பிறந்தால் ஸ்ரீநிவாஸனது கடாக்ஷமானது க்ஷணப்பொழுதேனும் தங்கள்மேல் விழப்பெறலாமல்லவோ? அந்தக் கடாக்ஷங்களில் தயாதேவியும் கூடுவதால் அது இன்னும் மேம்பட்டதாக ஆகுமல்லவோ! இதனைக் கருதியே அவர்கள் திருமலையில் ஏதேனும் ஒரு பிறவியைப் பெற விரும்பினார்கள் என்று அத்யாஸ்சர்யமாய் ஸாதிக்கிறார் நம் ஸ்வாமி.

மேலும், ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம் - தத்வத்ரயாதிகாரங்களில் அடையவேண்டிய பொருளின் மேன்மையைக் காட்டி, பின் முமுக்ஷுத்வாதிகாரத்தில் மோக்ஷத்திற்கு தடையாக இருக்கக்கூடிய, நாம் விடவேண்டிய அற்பமான உலகஸுகங்களில் உள்ள அல்பத்வம், அஸ்திரத்வம், துக்கமிச்ரத்வம், துக்கமூலத்வம் போன்ற ஏழு விதமான தோஷங்களை அறிவித்தார். தன் ஸ்வரூபம் மற்றும் எம்பெருமான் ஸ்வரூபத்தில் அசைக்கமுடியாத ஜ்ஞானம், அவனுக்கு கைங்கர்யங்கள் செய்ய வேண்டும் என்பதில் த்வரை மற்றும் அதற்குத் தடையாகவுள்ள ஸம்ஸாரத்தில் வெறுப்பும் அதிலிருந்து விடுதலை பெற தீவ்ரமான ஆசை - இதுவே மோக்ஷம் அடைய எண்ணுபவனின் நிலை, இதுவே முமுக்ஷுத்வத்திற்கு லக்ஷணம் என்று ஸ்தாபித்தார்.

இப்படி ஆழ்வார் மற்றும் நம் ஆசார்ய ஸார்வ பௌமனின் ஸ்ரீ ஸூக்திகள் மூலமாக எது நிலையான ஆனந்தம் என்பதனை அறிந்தும், அவர்கள் அறிவித்தபடி நாமும் திருவேங்கடமுடையானிடத்தில் சரணாகதி செய்து உஜ்ஜீவிப்போமாக!

ஸ்ரீ:

# ஸர்வம் பிராட்டி மயம்

ஸ்ரீமதி பழவேரி ரமா ராகவஸிம்ஹன்

*ப்ரதிஷ்டாபித வேதாந்த: ப்ரதிக்ஷிப்த பஹிர்மத:|*
*பூயா: த்ரைவித்யமாந்ய: த்வம் பூரிகல்யாண பாஜநம்||*

அவதார புருஷனாம் நம் ஸ்வாமி தேசிகனுக்கு அநுக்ரஹமான நடாதூர் அம்மாளின் ஆசீர்வாதம் இது. 'விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தினை பாரெங்கும் பரப்பி சார்வாகாதி மதங்களை நிரஸனம் செய்து அனைத்து விதமான மங்களங்களும் அமையப் பெறுவாய்' என்பது அம்மாளின் இந்த ச்லோகத்தின் அர்த்தம். ஸம்ப்ரதாய அபிவ்ருத்திக்கும், நடாதூர் அம்மாள் போன்ற பூர்வர்களின் ஆசியினாலும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ப்ராப்தமான மோக்ஷத்திற்கு இணையான வரம் ஆசார்யன் தேசிகன்.

ஹயக்ரீவனே சாக்ஷாத்தாக உபதேசித்து ஸ்வாமி தேசிகனை எழுதப் பண்ணின உயர்ந்த க்ரந்தம் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம். இதிஹாஸ, புராண, ஆழ்வார் ஸ்ரீஸூக்திகள், ஸ்ரீமத் பகவத்கீதை ச்லோகங்கள் இவையனைத்திற்குமான பூர்வாசார்ய வ்யாக்யானங்கள் என்று பற்பல பொக்கிஷங்களை ப்ரமாணங்களாகத் தன்னுள் கொண்டுள்ள வ்யாஸம் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம். இந்த க்ரந்தத்தினை காலக்ஷேப ரூபேண ஸதாசார்ய முகேன க்ரஹிப்பதென்பது ஆச்ரிதர்களின் பூர்வ ஜன்ம ஸுக்ருத பலனே. பூர்ணாசார்யரான ஸ்வாமி தேசிகனின் ஸ்ரீமத் ஸாரத்தை அநுஸந்திக்கும் பாக்யம் பெற்ற ஆச்ரிதர்கள் விசிஷ்டாத்வைதத்தின் அஸ்திவாரங்களில் பரிபூர்ணர்களாக இருப்பர் என்பது திண்ணம். ஸ்ரீமத் ஸாரத்தில் நம் ஸ்வாமி கோடிட்டுக் காண்பிக்கும் பிராட்டியின் ப்ரபாவத்தில் அந்வயித்து, இருவரது புருஷகாரம் மூலம் எம்பெருமானை நம் வசப்படுத்துவோம்.

**ஜகத்காரணியாகும் பிராட்டி**

ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் இருபத்து ஒன்பதாவது அதிகாரமான சரமச்லோகாதிகாரத்தின் (அதிகார) ஸங்க்ரஹப் பாசுரம் இது.

*ஒண்டொடியாள் திருமகளும் தானுமாகி*
*ஒரு நினைவால் ஈன்ற உயிர் எல்லாம் உய்ய*
வண் துவரை நகர் வாழ வசுதேவர்க்காய்
மன்னவர்க்கு தேர்ப் பாகனாகி நின்ற
தண் துளவ மலர் மார்பன் தானே சொன்ன
தனித் தருமம் தான் எமக்காய்த் தன்னை என்றும்
கண்டு களித்தடி சூட விலக்காய் நின்ற கண்
புதையல் விளையாட்டைக் கழிக்கின்றானே. (46)

சரம ச்லோகத்தின் ஸாரமாகும் இந்தப் பாசுரத்தின் முதல் இரண்டு வரிகள், 'அழகிய கைவளையல்களை அணிந்த திருமகளும், அவளுடைய ஸங்கல்பத்தினையே தனது ஸங்கல்பமாகக் கொண்ட எம்பெருமானும் இணைந்து ஈன்ற ஜீவன்கள் உய்ய' எனும் அர்த்தத்தினைக் கொண்டது. ஸந்நியோகசிஷ்ட ந்யாயம் என்று



ஒன்று உண்டு. அதாவது, ஒரு கார்யத்தில் இணையாக இருக்கும் இரண்டு விஷயங்கள் எல்லா இடங்களிலும் ஒன்றுடன் ஒன்று சேர்ந்தே இருக்கும். அப்படி இல்லையெனில் எக்காலத்திலும் எந்த ப்ரகாரணத்திலும் இரண்டுமே இருக்காதேயன்றி ஒன்றையொன்று பிரிந்து தனித்தனியாக வாராது. இந்த ந்யாயத்தின் படி பார்த்தோமானால் ஸ்ரீமந்நாராயணன் ஜகத்காரணன் என்றால் எப்பொழுதும் அவனுடனே இணைந்திருக்கும் அவனுடைய தர்மபத்நி ஜகத்காரணி என்பது தெளிவு.

பிராட்டியின் ரக்ஷகத்வம்

ஸ்ரீமத் ஸாரத்தின் பதினொன்றாவது அதிகாரமான பரிகர விபாகாதிகாரத்தில் ஆநுகூல்ய ஸங்கல்பம், ப்ராதிகூல்ய வர்ஜனம், கார்பண்யம், மஹாவிச்வாஸம், கோப்த்ருத்வ வரணம் ஆகிய ஐந்து அங்கங்களால் ஆனது சரணாகதி என்பதை விளக்குவதோடு, சரணாகதி செய்யும் ஸமயத்தே த்ரிஜடை ராக்ஷஸிகளிடம் கூறும் ஆறு வாக்யங்களினைக் கொண்டு பிராட்டியின் ரக்ஷகத்வத்தினையும் நிஷ்கர்ஷிக்கிறார் ஸ்வாமி.

1. **ஸாந்த்வமேவாபிதீயதாம்** - அமைதியான வார்த்தைகளைப் பேசுங்கள் - **ஆநுகூல்ய ஸங்கல்பம்**
2. **ததலம் க்ரூர வாக்யை: வ:** - க்ரூரமான வார்த்தைகளைக் கூறாதீர் - **ப்ராதிகூல்ய வர்ஜநம்**
3. **ராகவாத்தி பயம் கோரம் ராக்ஷஸாநாமுபஸ்திதம்** - இவளல்லாது ராகவனின் நிக்ரஹத்திலிருந்து நம்மை ரக்ஷிக்க வல்லார் எவருமிலர் (ஆகிஞ்சந்யம்

மற்றும் அநந்யகதித்வம்) - **கார்ப்பண்யம்**

4. **அலமேஷா பரித்ராதும் ராகவாக்ஷஸீகணம்** - ராகவனிடத்தே நமக்காகப் பரிந்து பேசி நம்மை இவள் கட்டாயம் ரக்ஷிப்பாள் - **மஹாவிச்வாஸம்**
5. **பர்த்ஸிதாமபி யாசத்வம் ராக்ஷஸ்ய: கிம் விவக்ஷயா** - இவளிடம் உங்கள் ப்ராணனை ரக்ஷிக்குமாறு யாசியுங்கள் (யாசித்துப் பெறுவதே புருஷார்த்தம்) **- கோப்த்ருத்வ வரணம்**
6. **ப்ரணிபாதப்ரஸந்நா ஹி மைதிலீ ஜநகாத்மஜா** - ரக்ஷ மாம் என்று பிராட்டியின் திருவடிகளில் சரணடையுங்கள் - **ஆத்ம நிக்ஷேபம்**

**மோக்ஷப்ரதத்வத்தில் பிராட்டியின் ஏற்றம்**

ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தின் முதல் அதிகாரமான உபோத்காதாதிகாரத்தின் ஸங்க்ரஹ பாசுரம் இது. ஸ்ரீவைகுண்டத்தில் எம்பெருமானுக்குக் கைங்கர்யம் பண்ணுவதில் ஜீவனுக்கு இருக்கும் ஸ்வரூப யோக்யதையினைக் கூறி, அந்த முக்தாத்மாக்களின் கைங்கர்யங்களை பிராட்டியும் எம்பெருமானும் ஒருசேர ஸந்தோஷமாக அநுபவிக்கின்றனர் என்கிறார்.

*திருவுடன் வந்த செழுமணிபோல் திருமாலிதயம்*
*மருவிடமென்ன மலரடி சூடும் வகைபெறுநாம்*
*கருவுடன் வந்த கடுவினையாற்றில் விழுந்தொழுகாது*
*அருவுடனைந்தறிவார் அருள் செய்ய அமைந்தனரே. [8]*

பிராட்டியை முன்னிட்டுப் பாசுரத்தைத் தொடங்கி அவள் பரிக்ரஹமாவதனாலேயே ஜீவர்கள் ச்ரிய:பதியின் அபிமானத்துக்குப் பாத்ரபூதர்கள் ஆவதைக் காண்பிக்கிறார். அகலகில்லேன் இறையுமென்ற பிராட்டியினைத் தனது திருமார்பில் தரித்திருப்பதனாலேயே ஜீவனிடத்தே எம்பெருமானுக்கு விசேஷ க்ருபை உண்டாகிறது. இந்த விசேஷ க்ருபை தான் தன்னடி பணிந்தாருக்கு அவனை மோக்ஷம் அநுக்ரஹிக்கப் பண்ணுகிறது என்பதை நிர்தாரணம் பண்ணுகிறார். ஸமாதிக தாரித்ரியனான ஸ்ரீமந்நாராயணனிடம் இல்லாத புருஷகாரம் எனும் திருக்கல்யாண குணம் அமையப் பெற்றதனால், மோக்ஷம் அநுக்ரஹம் பண்ணுவதில் பிராட்டியின் பங்கு இன்றியமையாதது என்பது தெளிவு.

*பொருள் ஒன்று என நின்ற பூமகள் நாதன் அவனடி சேர்ந்து*
*அருள் ஒன்றும் அன்பன் அவன் கொள் உபாயம் அமைந்த பயன்*
*மருள் ஒன்றிய வினை வல் விலங்கு என்று இவை ஐந்து அறிவார்*
*இருள் ஒன்று இலா வகை எம் மனம் தேற வியம்பினரே. [11]*

மற்றொரு அதிகார ஸங்க்ரஹ பாசுரமாகும் இதில் மோக்ஷத்தினை அபேக்ஷிக்கும் ஜீவன் பரமாத்ம ஸ்வரூபம், ஜீவாத்ம ஸ்வரூபம், உபாய ஸ்வரூபம், உபேய ஸ்வரூபம், விரோதி ஸ்வரூபம் எனும் ஐந்து விஷயங்களைப் பற்றின தெளிந்த ஜ்ஞானம் பெறுவது அவச்யம். இதில், பூமகள் நாதனே ஜீவன் அடைய வேண்டிய பரமாத்ம ஸ்வரூபம் என்றதன் மூலம் எம்பெருமானுடனான பிராட்டியும் (ஸந்நியோகசிஷ்ட ந்யாயம்) உபேயமே என்பதைத் தெளிவுபடுத்துகிறார்.

ஸ்ரீமத் ஸாரத்தின் இருபத்தியெட்டாவது அதிகாரமாகும் த்வயாதிகாரத்தில் **ஆத்மாநுரூபயா ச்ரியா ஸஹாஸீநம்** எனும் ஸ்ரீவைகுண்ட கத்ய சூர்ணிகையினை எடுத்துக்காட்டி, பரமபதத்தில் எம்பெருமான் தனக்கு எல்லா விதத்திலும் ஏற்றவளான பிராட்டியுடன் சேர்ந்தே வீற்றிருக்கிறான் என்பதை நிரூபிக்கிறார்.

**பிராட்டியின் ஸர்வவ்யாபித்வம்**

ஸ்ரீமத் ஸாரத்தின் இருபத்தியெட்டாவது அதிகாரமாகும் த்வயாதிகாரத்தில் ஸ்ரீ சப்தத்தின் ஆறு அர்த்தங்களையும் விவரித்து அவள் ஸர்வஜ்ஞை என்பதை எடுத்தியம்புகிறார்.

**ஸ்ரீயதே** - ஜீவனால் அடையப்படுகிறவள் (உபேயத்வம்)

**ச்ரயதே** - ஜீவனை அடைபவள் (சேதன லாபம் ஈச்வரனுக்கே - ஈச்வரத்வம்)

**ச்ருணோதி** - சேதனனின் அபயக் குரலைக் கேட்டு ரக்ஷிப்பவள் (ரக்ஷகத்வம்)

**ச்ராவயதி** - எம்பெருமானையும் கேட்கச் செய்பவள் (புருஷகாரத்தினால் க்ஷமிக்கப் பண்ணி அவனுடன் சேர்ந்து ஸந்தோஷிப்பவள் - போக்யத்வம்)

**ச்ருணாதி** - துஷ்கர்மாக்களைப் போக்குபவள் (மோக்ஷப்ரதத்வம்)

## ஆனியில் முக்கிய உத்ஸவங்கள்

**ச்ரவணம்**
ஜூன் 15 (ஞாயிறு) - ஜூலை 13 (ஞாயிறு)

**கோடை உத்ஸவம் (7 நாட்கள்)**
ஜூன் 27 (வெள்ளி) முதல்
ஜூலை 3 (வியாழன்) வரை

**ஸுதர்சன ஜயந்தி**
ஜூலை 4 (வெள்ளி)

**பெரியாழ்வார் திருநக்ஷத்ரம் (ஆனி கருடன்)**
ஜூலை 5 (சனி)

**நாதமுனிகள் திருநக்ஷத்ரம்**
ஜூலை 7 (திங்கள்)

**ஸ்ரீ ஸுதர்சன ஹோமம்**
ஜூலை 12 (சனி)

**தக்ஷிணாயண புண்யகாலம்**
ஜூலை 16 (புதன்)

**ஸ்ரீணாதி** - ஸுகர்மாக்களை நிர்விக்னமாக நடத்தி வைத்து ரக்ஷிப்பவள் (உபாயத்வம்)

சேதன அசேதனமென்று அனைத்தினாலும் ஆச்ரயிக்கப்பட்டு அனைத்தையும் ரக்ஷிக்கிறாள் என்றதன் மூலம் பிராட்டியின் விபுத்வம், ஸர்வாதாரத்வம் மற்றும் ஸர்வ வ்யாபித்வம் ஆகியவை தெளிவுற நிஷ்கர்ஷம் பண்ணப்பட்டது.

**பிராட்டியும் ஈஸ்வர ஸ்வரூபமே**

பரப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தினை திருமந்த்ரத்தில் அநுஸந்திக்கும் போதில், பிராட்டியுடன் கூடிய எம்பெருமானே ஈச்வர ஸ்வரூபம் என்பதை ஆசார்யன் தேசிகன் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தின் நான்காம் அதிகாரமாகும் அர்த்த பஞ்சகாதிகாரத்தில் விளக்குகிறார்.

**1. ச்ரியா ஸார்தம் ஜகத்பதி:** எனும் லைங்க புராண வசனத்தின் மூலம் லோக நாயகனான ஸ்ரீமந்நாராயணன் பரதசையில் பிராட்டியுடன் சேர்ந்தே இருக்கிறான் என்பதை நிஷ்கர்ஷம் பண்ணுகிறார் - **பரத்வம்**

**2. ஏஷ நாராயண:** ஸ்ரீமாந் எனும் ஹரி வம்ச வசனத்தைக் கொண்டு, வ்யூஹ தசையாகும் க்ஷீராப்தியில் ஸ்ரீமந்நாராயணன் பிராட்டியுடன் சேர்ந்து இருப்பதனைக் காண்பிக்கிறார் - **வ்யூஹத்வம்.**

**3. பவேயம் சரணம் ஹி வ:** எனும் ஸ்ரீமத்ராமாயண வசனத்தினை எடுத்து அவதார தசையிலும் எம்பெருமான் பிராட்டியுடன் இருக்கிறான் என்பதைத் தெளிவுபடுத்துகிறார் – **விபவம்**

**4. தயா ஸஹாஸீநமநந்தபோகிநி** எனும் ஆளவந்தாரின் ச்லோகத்தினை மேற்கோளாகக் கையாண்டு, எம்பெருமான் பிராட்டியுடனே ஆதிசேஷன்மேல் வீற்றிருக்கிறான் என்பதை எடுத்தியம்பி மோக்ஷம் அநுக்ரஹிப்பதில் பிராட்டியின் அதிகாரத்தினை நிரூபிக்கிறார் – **பலத்வம்**

**5. ஸ்வபரிசரணபோகை:** ஸ்ரீமதி ப்ரீயமாணே என்பதான ஆத்மஸித்தி பதங்கள் மூலம் ஆச்ரிதர்கள் புரியும் கைங்கர்யங்களினால் ப்ரீதி அடைவது பிராட்டியுடன் கூடிய எம்பெருமானே என்பதை விவரிக்கிறார் - **போக்யத்வம்**

**6. ப்ரஹ்மணி ஸ்ரீநிவாஸே** எனும் ஸ்ரீபாஷ்ய வசனத்தினைக் கொண்டு ஸதா ஸர்வ காலமும் பிராட்டி பரப்ரஹ்மத்தில் இருப்பதனால் அவளும் பரப்ரஹ்ம ஸ்வரூபமே என்பதை நிஷ்கர்ஷம் பண்ணுகிறார் - **ஸ்திரத்வம்**

பிராட்டியுடனான ஸ்ரீமந்நாராயணனே பரதத்வம் என்பதை ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தின் ஐந்தாம் அதிகாரமான தத்த்வத்ரய சிந்தநாதிகாரத்திலும் ஸ்வாமி தேசிகன் அழுந்தக் கூறுகிறார்.

**7. நித்யைவைஷா ஜகந்மாதா விஷ்ணோ: ஸ்ரீரநபாயிநீ** எனும் ஸ்ரீவிஷ்ணுபுராண வாக்யத்தினை ஸாதித்தருளி ஸர்வாவஸ்தையிலும் எம்பெருமான் ஸபத்நீகனாய் இருப்பதை ஊர்ஜிதம் செய்கின்றார் - **ஸர்வத்வம்**

**தேசிகனே தேசிகன்**

*நானிலமும் தான்வாழ நான்மறைகள் தாம் வாழ*
*மாநகரின் மாறன் மறைவாழ –ஞானியர்கள்*
*சென்னியணி சேர் தூப்புல் வேதாந்த தேசிகனே*
*இன்னுமொரு நூற்றாண்டிரும்.*

இப்படி மனமுருகி ஸ்வாமி தேசிகனை சிஷ்யர்கள் கொண்டாடப் பல காரணங்கள் உண்டு. பாஷ்யகாரருக்கு ஸ்வாமி தேசிகனையொத்த சிஷ்யர் வேறெவருமில்லை. ஆச்ரிதர்களுக்கு ஸ்வாமி தேசிகனை விடவும் உயர்ந்த ஆசார்யன் இன்னொருவரில்லை. அவரது திருவடி தூளியாக இருப்பதை விடவும் பெரும் பாக்யம் வேறெதுவும் இல்லை. அவர் அநுக்ரஹித்த க்ரந்தங்களுக்கு இணையான க்ரந்தங்கள் வேறொன்றில்லை.

ஆசார்யன் தேசிகனின் ப்ரபாவத்தினை விளக்க முற்படுவதென்பது **மதி இன்மையால் பயிலும் கவிகளில் பத்தி இல்லாத என் பாவி நெஞ்சால் முயல்கின்றனன் அவன் தன் பெருங் கீர்த்தி மொழிந்திட** என்பதாகவே ஆகும். எனினும் ஸ்வாமி தேசிகனின் ஏற்றம் பேசுவதென்பது பெறற்கரிய பேறு என்பதனால் எம்பெருமானின் திருவடி அடையும் கால பர்யந்தம் தேசிகனே இன்னுமொரு நூற்றாண்டிரும் என்று ஆசார்யன் புகழ் பாடிக் கொண்டே இருப்போம். ஸ்வாமி தேசிகனின் ஸ்ரீபாத தூளியாக வர்த்தித்து பிராட்டியின் கடாக்ஷத்தினால் எம்பெருமானிடம் ப்ரார்த்தித்து அவனையே பலனாக அடைவோம். ❊


## ஆஸ்திகர்களுக்கு ஓர் அறிவிப்பு

பித்ரு காரியங்கள் செய்வதற்கு, சென்னை மயிலை ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானத்திற்குச் சொந்தமான (G.K. மண்டபம் அருகில்) அறைகள் வாடகைக்கு விடப்படும்.

விவரங்களுக்கு தேவஸ்தான அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்,**
4/11, கேசவ பெருமாள் கோயில் சன்னதி தெரு,
மயிலாப்பூர், சென்னை 600 004. தொலைபேசி: 044-2495 3799.

ஸ்ரீ:

# Important Tenets Of Our Sampradaya (27)

## The Radiant 'Right-hand' Of Sriman Narayana

Sri U. Ve. Natteri P. Srihari (a) Lakshmi Nrusimhacharyar Swami, Mylapore

In this month of Aani, we have two successive important days — that of Sri Sudharsana Jayanthi and Periyazhwar Saatrumurai, which occur on July 4 and 5, respectively. So, here is a brief overview of the greatness of the Divine Discus in this write-up.

The Chakra or the Discus, reverentially referred to as Sudharsana Azhwan, is the principal weapon amongst the five in the armoury of Sriman Narayana. The other four are the conch, sword, mace and bow. Adorning the right hand of the Lord, the Chakra is an embodiment of wisdom and power.

These virtues have been well exemplified and documented by Swami Desika as he sought the divine grace of Sudharsana when he chose to compose his Tamil Prabandham 'Paramatha Bhangam' which is an outright condemnation of other religions (philosophies). In that, the first and final verses are dedicated to the Discus Lord. The author concludes the Prabandham saying that Sudharsana is none other than a manifestation of the radiance of Lord Ranganatha.

திகழ் அரவணையரங்கர் தேசென்ன மன்னிய
திரிசுதரிசனர் செய்ய ஈரெண் புயங்களே!

Thus, Sudharsana is not just a weapon in the Lord's hand but a divine Avathara in his own right. Legends have his Avathara day as Aani-Chitthirai. He is a 'Nithyasuri' forever basking in the grace and service of the Lord. Always in alert-mode at the disposal of Lord Vishnu, Sudharsana is ever ready to fulfil the commands of his master, underlining the importance of impromptu service to the Lord.

There are countless references in the Vedas, Ithihasas, Puranas, Divya Prabandham, Purvacharya's works and Swami Desika's Sri Sookthis about this 'go-to person' of Lord Vishnu. In fact, Sri Desika has dedicated two exclusive hymns for the Divine Discus, namely, Sudharsana Ashtakam (9 Slokas) and Shodasayudha Sthothram (19 Slokas).

In his unique style, Swami Desika captures the radiance, smoothness, speed and conquests of the Chakra in Sudharsana Ashtakam which brings out numerous virtues of the Chakra. Some of these are:

- Striking terror in the enemy ranks
- Being the subject of worship in the Veda called Sathapatha Brahmana
- Being an expert in saving his devotees
- Possessing the six natural and principal qualities (like the Lord) in plenty
- Being like the sun to the darkness of worldly miseries of his devotees
- Seated in great Yanthraa-design installed by devotees as prescribed in scriptures
- Being the quintessence of all entities of the world
- Destroying fear and disease from all quarters

In Shodasayuha Sthothram, Swami Desika sings the glory of the sixteen weapons that adorn as many hands of Sudharsana. These weapons, the author says in the 18th Sloka, Sudharsana uses to safeguard the whole world.

The 16 weapons which the Azhwan carries — eight each on the right and the left — are as follows:

**On his right are:** 1. Chakra, the Discus; 2. Parasu, the Axe; 3. Kuntha, the Spear; 4. Dhanda, the Baton; 5. Ankusa, the Goad; 6. Agni, the fire; 7. Nandhaka, the Sword; 8. Shakthi, the Dart.

**On his left are:** 9. Sankha, the Conch; 10. Saarnga, the Bow; 11. Paasa, the Noose; 12. Seera, the Plough; 13. Vajra, the Thunderbolt; 14. Gadha, the Mace; 15. Musala, the Pestle and 16. Soola, the Trident.

The grace of Sudharsana is known to guarantee all that is auspicious, especially, good health and success. Obvious it is from our day-to-day experience that not only does he grant success but does it in quick time, quite in tune with his characteristics.

May all be recipients of the grace of the Divine Discus!

***(to be continued…)***

ஸ்ரீ:

# Srimath Rahasya-Thraya Saaram

## A Manual For Beginners (27)

Smt. Padmalatha Sridharan, Chennai



**Chapter – 26**

**Prabhava Raksha Adhikaram**

Swami extols the greatness of Upaaya in this chapter so that it is not undermined by others.

It is said that both grievous sins and great virtues yield phalan (results) quickly in this very life. In the case of Prapatthi, it even has the power to deplete Praarabdha karmas, unlike bhakti. Depending on the desperation and prayer of the Prapanna, the paapas are destroyed even before the requested time — be it the next second, day, month, or the end of the sareeram — and this is denoted by Bhagavan’s words: “Maa Sucha:”.

Some people questioned the ability of Prapatthi to deplete Praarabdha karmas as follows:

If Praarabdha karmas can also be depleted by Prapatthi, then the sorrows caused by their phalan should not occur to a Prapanna. Just as other benefits accrue to a Prapanna without asking, these karma phalans too could have been destroyed by Him, even if not expressly requested during Prapatthi. Yet we see Prapannas experiencing sorrows; hence, it might merely be eulogistic to claim that Prapatti removes Praarabdha karmas too.

Swami responds that if Iswara were to cause a Prapanna to experience only pleasures in this world, without any sorrow, he would never develop detachment from it. His Bhagavat anubhavam also will not grow. Just like a father who disciplines his errant child, Bhagavan punishes hard natured ones through these sorrows which are actually anugrahams only.

Swami illustrates this with an anecdote from Bhattar’s life — when the king asked Bhattar whether he had a particular ailment, Bhattar replied, 'I have one teacher’. For niyataayus, to get vairagyam to leave the world, and for aniyataayus, to ensure that he does not do Ayushya Homam, etc., to increase his life span. Sorrows in the form of ailments, etc., are teachers.

Bhagavan causes sorrows to make a Prapanna despair of this world and the adverse experiences are palan for his misdeeds and those parts that are punishments and cause prayaschitham are palan for upaayam. The 'punishments' might even appear as favorable outcomes from Praarabdha karmas. This is explained by Kakasura episode where the loss of an eye for a serious offender like kakasura was indeed an anugraham to him since he would not dare to repeat his misdeed causing further paapas and thus of ultimate benefit to him. His life was saved — which completed his Prapatthi phalan.

Though our paapas in a second can cause us to be in this world till Mahapralayam, without overruling sastraic restrictions, the greatness of Prapatthi in destroying them have to be accepted fully. Even heinous crimes, such as murdering one’s parents, if committed before Prapatthi, are destroyed by Bhagavan. If committed afterwards, they are treated as deliberate utthara paapa and depleted accordingly.

நம் திருக்கோயிலில் நடை பெறும் உத்ஸவங்களின் தொகுப்பினை நேரலையில் அல்லது பதிவு செய்து காண உருவாக்கப்பட்ட ப்ரத்யேக சேனல்.

இன்றே SUBSCRIBE செய்யுங்கள்

Swami then cautions us that those Bhagavatas who, bound by circumstance, have embarked on the paths of karma yoga, jnana yoga, etc., and seek material pleasures, should not be taunted or ignored. One who stumbles in the right path is greater than one who took the wrong path. As per Sastras, our conduct with Bagavathas who have left out one or two Samskarams like Thapam, Pundram, Naamam, etc., (out of the Pancha Samskaramas) have some differentiation, Yet, failing to regard them respectfully — or worse, abusing them — is harmful, as they too would get Moksham eventually.

When it is said that Karma yoga will never go waste and become fruitful at a later time, it would obviously apply to Prapatthi which is even greater. Swami quotes Gita, Itihasa Samuchayam, etc., to establish that, if even repeat offenders would get moksha phalan after prayaschittham, then there is no doubt about blemishless, Prapannas getting moksham and their greatness cannot be assessed correctly, even by nithyasuris. Thus, we should not offend Bhaagavathas at any cost even if they seem to stray from the right path. Bhashyakarar mentioned Bhagavath, Bhaagavatha apacharams, specifically other than dos and donts and since bagavathas are rare to see in this world, they should be celebrated. Those who are into Bhagavan would get moksham eventually even if they are offenders, and even those who just appear to be Bhaagavathas by outer signs and not intrinsically so, should also be honoured till they are outed.

Regarding Nama Sankeerthanam, it causes benefit only to those who have no hatred towards Bhagavan. It is said in Srimad Bagavatham that invoking Bhagavan's name even in jest, to denote someone, say it without knowing the meaning, just blabber it etc., would render one holy, but Swami clarifies that this applies only to those who do not offend Bhagavan deliberately or hate Him.

Then a question arises - Some people seem to have attained Sadgathi even with hatred, fear etc., towards Iswara, like Sisupala, Kamsa etc., as per puranas. Swami clarifies that there are special circumstances regarding specific adhikaris which caused this. It is said that those who die in certain Bhagavath Kshethrams get moksham -- this applies only to those without misdeeds, says Swami, as otherwise offenders too would get moksham just because of having lived there. Residing in Bhagavath Kshethram helps in the limited sense of getting enlightenment in the last stages, correcting him, only if, he has erred by indulging in material pleasures in a Sastraic way. There is a rider here that just as Kshethra abode causes virtuosity, sins committed there have multifold effects. But Iswara will deplete the sins in some manner and ensure moksham.

A Prapanna should know that Bhagavan is the Only Commander and treat His Bhaagavathas as precious as water in a desert. He should not commit misdeeds by all three organs of mind, speech and body for as long as he remains in this world, mingle with Bhaagavathas honourably and keep contemplating upon Bhagavan anticipating his ascension to Srivaikuntam.

***(to be continued…)***


## ஆஸ்திகர்கள் கவனத்திற்கு

பரமபத ப்ராப்தி அடைந்தவர்களுக்கு
12 நாட்கள் வரையிலான கைங்கர்யங்களைச் செய்யும் வகையில்,
ஆறு பகுதிகளுடன், நம் தேவஸ்தானத்தின் 'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்' இயங்கி வருகிறது.



**முகவரி மற்றும் விவரங்களுக்கு:**

**'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்'**
**9/5, வேங்கடேச அக்ரஹாரம் தெரு,**
**மயிலாப்பூர், சென்னை – 600004.**
**போன்: 044 – 4322 9401.**

**நிர்வாகம்:**
**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை – 600004.**

ஸ்ரீ:



## *With Pranams:*

**R. Parthasarathy & Dhirish Parthasarathy,**

Nanganallur, Chennai 600 061.

Mobile: 94440 06719.

**SVDD thanks Sri R. Parthasarathy & Dhirish Parthasarathy**

**for sponsoring this month's issue of Desika Sandesam**



Members of the new Electoral Board with Trustees



கருட ஸேவை